**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),**

**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590**

**<u>ஆணை நாள்: 03.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

...............

**<u>வழக்கு எண். SA6825/F/2019</u>**

**திரு இரா. அரவிந்த் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ),**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்**
**பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,**
**எண்.1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு),**
**கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர்,**
**சென்னை - 600 008. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **12.04.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **18.05.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **13.07.2019** |

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு இரா. அரவிந்த், சென்னை மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ), தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார

மேம்பாட்டு கழகம், எண் 1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு), கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 12.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் அ2/989/2017 கோப்புகளை தான் பார்வையிடவும் மற்றும் தனக்கு தேவையான கோப்புகளை ஒரு நகல் சான்றளித்து வழங்கவும், மற்றும் ஆ2/1770/2017 கோப்புகளை மற்றும் அதற்கு சம்மந்தமான கணக்கு கோப்புகளை பார்வையிடவும் மற்றும் தனக்கு தேவையான கோப்புகளை ஒரு நகல் சான்றளித்து வழங்கவும், கடந்த 5 ஆண்டுகளாக நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர், பதவியை பொறுப்பு கூடுதல் பதவியாக கவனித்துக் கொண்ட அலுவலர்களின் பட்டியர் (பெயர், கல்வி, தகுதி, வயது, வகிக்கும் பதவி மற்றும் பதவிக்காலம் அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி அதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் பொறுப்பு பணப்பயன்கள் தொகையை பட்டியலிட்டு வழங்கவும் மற்றும் 06.03.2019 அன்று இக்கழகத்தின் வருகைப்பதிவேடு முழு இருபக்க நகல்களையும் உண்மை நகல் என்று சான்றளித்து வழங்கவும் மற்றும் 06.03.2019 காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணி வரையிலான CCTV காட்சியையும் ஒரு நகல் வழங்க வேண்டும். நிதி ஆலோசகர் மற்றும் நிறுவனச் செயலர் (பொறுப்பு) பதவிக்கு அண்மையில் பணியமர்த்தப்பட்ட அதிகாரியின் விபரத்தை இக்கழக ஊழியர்களுக்கு எழுத்து பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளதா? 32 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் மற்றும் 32 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு மின் அஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ள தகவலின் கோப்புகளை ஒரு நகல் என்று சான்றளித்து வழங்கக் கோரி 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 10.05.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 18.05.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம், எண் 1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு), கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 17.06.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 13.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 12.04.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு முன்னறிவிப்பு செய்து வேலை நாட்களில் நேரில் வந்து பார்வையிட அனுமதிக்குமாறும், பார்வையிட்ட பின் மேல்முறையீட்டாளர் கோரும் ஆவண நகல்களை சான்றிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 7(6)-ன்படி இலவசமாக வழங்குமாறும் பொதுத் தகவல் அலுவலருக்கு இதன்மூலம் ஆணையம் உத்தரவிடுகின்றது.**

- **மேல்முறையீட்டாளர் 12.04.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- (**ச.த. தமிழ்குமார்**)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA6825/F/2019
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
நிதி ஆலோசர் மற்றும் நிறுவனச் செயலர் (பொ),
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்
பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
எண்.1/1(1) மேயர் ராமநாதன் சாலை (கிழக்கு),
கெங்கு ரெட்டி சப்பே அருகில், எழும்பூர்,
சென்னை - 600 008.

மனுதாரர்
திரு இரா. அரவிந்த்,
எண் 1/1, சரோஜினி பாய் தெரு,
மதியழகன் நகர், சாலிகிராமம்,
சென்னை - 600 093.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-2020